# கவியரங்கம்.

( திருக்குறளைத் தழுவி அறிஞர் பலர் இயற்றிய கவிகள் )


## மதுரைத் திருவள்ளுவர் கழகம்

மீனாட்சி சுந்தரர் திருக்கோவில்

வடக்காடி வீதி, மதுரை.

சுவை 908
Rs.

★ ★



★

கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவு விழாவில்

(2—9—1956) கவியரங்கேறியவை

மதுரை அவ்வை தி. க. சண்முகம் நூலகம். தமிழியல் துறை

# கவியரங்கம்

மதுரைத் திருவள்ளுவர் கழக 15-வது ஆண்டு நிறைவு விழாவில் அரங்கேறிய கவிகள்

★

தொகுத்தோர் :

புலவர்மணி, வித்துவான், தி. கி. சுந்தரமூர்த்தி.

பண்டித. ஆ. சண்முகவேலு.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 2782
நன்கொடை எண்: 2782

வெளியிடுவோர் :

ஸ்ரீ இராஜேஸ்வரி பப்ளிஷிங் ஹவுஸ்,
மேலச்சித்திரை வீதி, மதுரை.

கிளை :- மேட்டுத்தெரு, சேலம் டவுன், சேலம்.

1956

# முகவுரை.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் கவியரங்கு நடைபெறுவது இவ்வாண்டே முதலாகும். இனி ஆண்டு தோறும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை அமைக்க விரும்பியுள்ளோம். தமிழ் இனத்திற்கே பாவியற்றும் வன்மை இயல்பாகவே உண்டு. அவ்வாற்றலை முறையாக ஒழுங்கு படுத்தி வெளியிட ஊக்குவிக்கும் கருத்தாலேயே இவ்வாண்டு கவியரங்கம் நிகழ்கிறது.

எங்கள் வேண்டுகோட்கிணங்கி யாங்கள் கொடுத்த தலைப்பில் நின்று சிறந்த செய்யுட்களை யியற்றி இந்த அரங்கைச் சிறப்பித்த புலவர் பெருமக்கள் பதின்மரையும் வாழ்த்தி எங்கள் அன்புகலந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். இக்கவியரங்கிற்குத் தலைமைதாங்கிப் பெருமை செய்த பேராசிரியர், செந்நாப்புலவர் திரு. **ஆ. கார்மேகக் கோனார்** அவர்கட்கும் நன்றியுரித்தாகுக.

இதனை அச்சிட்டு வெளியிட்ட மதுரை இராசேசுவரி பதிப்பகத்தாருக்கும் மனங்கலந்த நன்றியை வழங்குகிறோம்.

இங்ஙனம்,

மதுரை
31—9—56

**கி. பழனியப்ப பிள்ளை,**
தலைவர்
மதுரைத் திருவள்ளுவர் கழகம்.

தலைவர், பேராசிரியர், செந்நாப்புலவர்,

திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் கூறிய

## கவியரங்க முகவுரை.

திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவில் இவ்வாண்டு கவியரங்கம் என்ற ஒரு புதிய நிகழ்ச்சியும் நடைபெறுவது அறிஞர்களால் பெரிதும் பாராட்டத் தக்கதாகும். தமிழ் மொழியில் செய்யுட்களும் அவற்றின் இலக்கணமும் கடல்போல் பரந்து ஆழ்ந்துள்ளன. தமிழ் மொழியின் செய்யுட் சுவைகள் மற்றைய மொழிகளின் கவிச் சுவைக்கு ஒரு சிறிதும் இளைத்தனவல்ல. வெண்பா முதலிய தமிழ்ச் செய்யுட்களின் இலக்கணங்களை விரித்து ஓதும் பழந் தமிழ் நூல் தொல்காப்பியமே. பொருட்கு நிலைக்களனாவது செய்யுள் ஆதலின் செய்யுள் இலக்கணம் தொல் காப்பியத்துள் மிக நுணுக்கமாக உணர்த்தப்படுகிறது. தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களாக மாத்திரை முதலாக முப்பத்து நான்கு உறுப்புக்கள் கூறுகின்றனர். தொல்காப்பியச் செய்யுள் இலக்கணத்தைப் பின்பற்றி எழுந்த வழிநூல்களும் சார்பு நூல்களும் பலப்பலவாகும். அவற்றுள் பெருவழக்காகப் பயிலப் பெறுவன யாப்பருங் கலமும், யாப்பருங்கலக் காரிகையுமாம்.

தொல்காப்பிய இலக்கணத்தையும் பிற்கால இலக் கணத்தையும் பின்பற்றி பாடப்பெற்ற செய்யுட்கள் இப்போது பல்லாயிரக் கணக்காக உள்ளன. பத்தொன் பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை தமிழ் மொழியில்

செய்யுட்களே மிகுதியாக இயற்றப்பெற்று வந்தன. அச்சுப்பொறியும் எழுதும் தாளும் இல்லாத காலத்தில் பனை ஓலைகளில் மெய்வருந்த எழுதவேண்டி இருந்த படியால் அறிஞர்கள் தாங்கள் கருதிய கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுவதற்குக் கருவியான செய்யுட்களா லேயே இயற்றி வெளியிடலாயினர். இதுவே தமிழ் மொழியில் உரை நடை நூல்கள் இல்லாமல் போனதற்கு உள்ள காரணமாகும். பல்லாயிரக் கணக்கான படிகள் வெளியிடுவதற்குக் கருவிகளடங்கிய அச்சகங்கள் இருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து தமிழ் மொழியில் உரை நடை நூல்கள் மிகுதியாக வெளிவர லாயின. தமிழ் மொழியில் உரை நடை யில்லாக்குறையை நீக்குவதற்கு ஊக்கம் கொண்ட அறிஞர்கள் செய்யுள் இயற்றுவதென்பதனை இக்காலத்தில் அறவே மறந்து புதிய முயற்சியில் முனைவராயினர். இப்பொழுது தமிழ் மொழியில் உரை நடை நூல்களும், இதழ்களும் மிக்க அளவில் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

தமிழ் மொழியில் செய்யுள் வளம், இராமலிங்க வள்ளலார், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இவர்க ளோடு நின்றுபோக, பின்னர் இந்திய நாட்டின் சுதந்திரக் கிளர்ச்சியின்போது தமிழ் மொழியில் உணர்ச்சி மிக்கப் பாடல்களை இயற்றியவர் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார். இவ்விருபதாம் நூற்றாண்டின் தமிழ் அறிஞ ரால் மிகவும் பாராட்டப் பெற்ற கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை யாவர். இக்காலத்தில் ஒரு சிலர் திங்கள், வார நாளிதழ்களில் கவி பாடும் வேட்கையால் பல கவிகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இத்துறையில் இவர்களது

ஆர்வம் மிகப்பாராட்டத் தக்கதாம். எனினும் இவர்களுள் ஒரு சிலர் தமிழ் மொழியின் செய்யுள் இலக்கண வரம்பினை அழித்துத் தங்கள் மனம் போனவாறு செய்யுட்களை இயற்றுகின்றனர். இது பெருந்தவறாகும்.

ஒருவருக்குச் செய்யுள் இயற்றுவது என்பது அவர் களது கருவிலேயே அமைந்த திருவாக இருக்கவேண்டும். பரந்த நூலாராய்ச்சியுடையவர்களெல்லாம் சிறந்த பாட்டுக் களை இயற்றிவிட முடியாது. சிறந்த யாப்பிலக்கணங் களைக் கற்றவர்களெல்லாம் சிறந்த யாப்புக்களை யாத்து விட முடியாது. இயற்கையில் இவ்வாற்றல் இல்லாதவர் கள் முனைந்து முயன்று பாடும் ஒரு சில பாட்டுக்களும் படிப்போர்க்குச் சுவை பயக்கமாட்டா. ஒன்பான் சுவை யும் தன்பால் அமைய நான்கு வகைக் கவிகளையும் பாடிய கவி அரசர்கள் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகம், இரட்டைப் புலவர்கள், படிக்காசுப் புலவர் முதலியோராவர். பிற்காலத்தில் இவர்களது பாடல்கள் பொதுமக்களது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

இக்காலத்தில் மறைந்துபோன கவிவளத்தை மீண்டும் பெருக்குவதற்கு இத்தகைய கவி அரங்கங்கள் சால வேண் டற்பாலனவாகும். திருவள்ளுவர் கழகத்து இன்றைய கவியரங்கப் பாடல்களெல்லாம் திருக்குறள் பற்றியதாகவே இருப்பது சாலக் குறிக்கொள்ளத் தக்கது. திருக்குறள் பற்றிய கட்டுரைகளும் செய்யுட்களும் மல்கி நூல் நிலையங் களை நிரப்புதல் வேண்டும். இன்றைய கவி அரங்கில் கலந்துகொள்பவர்க ளெல்லாம் சிறந்த ஆசிரியர்களும் புலவர்களுமாவர். இவர்களது கவி அரங்கம் தமிழ்நாட்டுக் கவி ஆர்வம் படைத்த இளைஞர்களுக் கெல்லாம் சிறந்த

வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இப் புது முயற்சியை மேற்கொண்ட கழகத்தாரின் செயலை நான் மிகமிகப் பாராட்டுகின்றேன். இம்முயற்சியில் என்னை ஈடுபடுத்தியதற்கு எனது மனங்கலந்த நன்றி.

வாழ்க தமிழகம் ! வாழ்க கவிவளம் !!

# உள்ளுறை


பக்கம்

1 தலைவர் முன்னுரை :

செந்நாப்புலவர், திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்கள் தமிழ்ப்பேராசிரியர், மதுரை.

2 வள்ளுவர் கண்ட இறைவன் : 1

வித்துவான் திரு. அ. இராசகோட்டியப்பனவர்கள் தலைமைத்தமிழாசிரியர், நகரவை உயர்பள்ளி, விருதை.

3 வள்ளுவர் கண்ட இல்லறம் : 3

வித்துவான். திரு. நா. சிவராமமுத்துக்குமாரவேலவர்கள். தலைமைத் தமிழாசிரியர், நாடார் சரசுவதி உயர்பள்ளி, தேனி.

4 வள்ளுவர் கண்ட மகளிர் : 7

புலவர். திரு. சி. இராமசாமி அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், மாவட்டக்கழக உயர்பள்ளி, வத்தலக்குண்டு.

5 வள்ளுவர் கண்ட துறவறம் : 13

வித்துவான். திரு, வீ. ப. நடராசன் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், பசுமலை.

பக்கம்

6 வள்ளுவர் கண்ட அறிவியல் : 18

வித்துவான். புலவர்மணி. திரு. தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள், தமிழாசிரியர், உயர்பள்ளி, பசுமலை.

7 வள்ளுவர் கண்ட வளநாடு : 24

பண்டித, செந்தமிழ்ச்செல்வர். திரு. அ. முத்துசாமிப் புலவர் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர் தூயமரியன்னை உயர்பள்ளி, மதுரை.

8 வள்ளுவர் கண்ட பொருளியல் : 27

புலவர். திரு. க. ஆறுமுகனாரவர்கள், B. O. L. (Hons,) தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

9. வள்ளுவர் கண்ட இன்பியல் : 33

பண்டித, வித்துவான், திரு. தி. சங்குப் புலவரவர்கள் தமிழாசிரியர், உத்தமபாளையம்.

10. வள்ளுவர் காட்டும் வாழ்வியல் : 37

திரு. அ. கி. பரந்தாமனாரவர்கள், M.A., தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

11. வள்ளுவர் கண்ட அரசியல் : 39

பண்டித, திரு. மீ. கந்தசாமிப் புலவர் அவர்கள், தமிழாசிரியர், தூய மரியன்னை உயர்பள்ளி, மதுரை.

மதுரை
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்.

# வள்ளுவன் கண்ட இறைவன்.

வித்துவான், திரு. அ. இராசகோட்டியப்பன், விருதுநகர்.

ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் அகரம்
நன்றாகிய முதலாமென நடுநின்றதோர் இறைவன்
முன்றானென நின்றானெனு முதற்பாமொழி புலவன்
தன்றானெனுந் திருவள்ளுவன் தகைமாண்புகழ் வாழி! (1)

கலையாகிய கடலைக்கரை கண்டாற்பய னென்னோ?
நிலையாகிய நிறைவாமுயர் அறிவாலொளிர் இறைவன்
தலையாயடி தொழுகென்றுரை சாற்றுந்தனித் தேவன்
குலையாநிலைத் தமிழ்மாமறை குறளின் புகழ் வாழி! (2)

மனமாமண மலிதாமரை வாழ்வாகிய இறைவன்
இனமார்நிறை யுயிராரருள் ஈயுந்தனித் தலைவன்
தனைவாழ்த்துதல் பேறாமெனுந் தலைநாவலன் பொதுநூல்
துனிமாயிரு துருவத்திடை தோன்றுந்தமிழ் நூலே! (3)

வேண்டாமையு டன்வேண்டுதல் மேவாததோர் இறைவன்
மாண்டாமரை சேர்ந்தாரொரு நாளுந்துயர் வாரார்
பூண்டானடு நிலையாமிறை புகழ்வாசுகி கணவன்
ஆண்டானுல கெல்லாம்குற ளாலேஎனும் உலகம்! (4)

இறைவன்றிருப் பொருள்சேர்புகழ் ஏத்துந்தனி உயிர்கள்
சிறைவல்லிரு வினையின்றியோர் சிறப்பெய்துவ ரென்றே
முறைநன்மொழி வழங்குங்குறட் பொய்யாமொழி முனிவன்
நிறைநல்லொளி யுடையானிறை என்றேநிகழ் வுண்மை!(5)

## வேறு

எப்பகையும் இல்லாதான் இறைவனவன் இயற்கையினில்
தப்புபொறி அவித்தஅவற் சாருநெறி மெய்ந்நெறியாம்
அப்புனித நெறிநின்றார் நீடுநின்றார் என்றருள்செய்
மெய்ப்புலவன் வாயுறையே மேதினிமேல் வாழியரோ! (6)

உவமையிலான் உவமையிலா இணையடியை உளத் திருத்தித்
தவமுயலுந் தவமடையச் சார்பழித்துத் தகவுணர்ந்து
புவியிலறம் பொருளின்பம் புரிதலன்றித் துணையிலெனும்
தவமுனிவன் வள்ளுவன்தன் தமிழ்மறையே உயிர்த் துணையாம்! (7)

அறக்கடலும் ஆவனவன் அவனுடைய எண்குணனும்
மறக்கவரும் பிறப்பென்றார் மறவாமல் அடிப்புணையை
உறக்கனலின் மெழுகாக உளமிருத்திப் பிறப்பறுகென்
றறக்கதிர்செய் சுடர்க்கதிரோன் அருள்குறள்நூல் வாழியரோ! (8)

## வெண்பா

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கென்று—முற்றுதவ
வள்ளுவனார் சாற்றும் மறைப்பொருளை யோர்ந்துணர்ந்தோர்
உள்ளுவரோ பற்றை உவந்து. (9)

## வாழி

வாழிதிரு வள்ளுவனார் வாழி திருக்குறள்நூல்
வாழியவர் கண்ட இறைவாய்மை—வாழியரோ
வாழிய மாமதுரை வள்ளுவர் நற்கழகம்
வாழி தமிழ்நூல் வழக்கு. (10)

# வள்ளுவர் கண்ட இல்லறம்.

(வித்துவான் திரு. நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.)

## அறத்தின் இயல்.

1. வள்ளுவரின் நல்லறத்தை மாண்பார் கவியரங்கில்
உள்ளம் மகிழ உரைத்திடுவேன் — தெள்ளுதமிழ்ப்
பாவலர்கள் முன்னிலையில் பாட்டின் திறமறியேன்
ஆவலினால் பாடல் அமைத்து.

2. தெய்வத்தை வாழ்த்துகின்ற சீர்சால் முதலறமும்,
வையத்தோர் போற்றும் மழையறமும், — செய்ய
அறவோர் அறமுடனே, ஆன்ற அறத்தின்,
திறனறிதல் மிக்க சிறப்பு.

3. இல்வாழ்வான் றன்னறமும், இல்லாள் தனியறமும்,
வல்ல புதல்வர் மகிழறமும், — நல்ல
துறவோர் அறத்துடனே, தூய அறப்பால்,
பெறவைக்கும், நன்மை பெரிது.

## சீர்சால் அறம்.

4. "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிதாம்" — எனச்சொல்லித்
தெய்வத்தை வாழ்த்துகின்ற சீர்சால் அறமதனை
வையத்தோர்க் கீந்தார் மகிழ்ந்து.

## மழை அறம்.

5. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய் உதவுவதுந் தூமழையென் —றிப்பாரில்
வானின் அறமதனை வாகாய் எடுத்தியம்பிக்
கோனிலையைச் சொற்றார் குறித்து.

## அறவோர் அறம்.

6. "அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகுஞ் சீர்த்தியரென்"—
நிந்தநிலத்
தெல்லா வுயிர்க்கும் இனிதாய் அருள்புரியும்
நல்லறத்தைச் சொன்னார் நயந்து.

## ஏற்ற அறம்.

7. "மனத்துக்கண் மாசகற்றி மாண்பாய் ஒழுகல்,
அனைத்தறனும் ஆகுமென்" றுய்ந்து —
நினைத்துரைத்தே
எல்லா அறத்திற்கும் ஏற்ற அடியறத்தைச்
சொல்லிவைத்தார் தூய்மை சுரந்து.

## அறத்தின் திறம்.

8. "அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்,
இழுக்கா இயன்ற தறமென்"(று) — ஒழுக்கநெறி
சொற்றதிரு, வள்ளுவரின் தூய பொருளுரையைக்
கற்றவர்கள் கொள்ளல் கடன்.

## இல்வாழ்வான் அறம்.

9. "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" யென்னுந்
திறனார்ந்த இல்வாழ் திறலோன் — மறவாமல்,
"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை."

## இல்லாள் அறம்.

10. "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணையாம் —
எனக்கொண்டே
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

## இருவர் அறம்.

11. நன்மக்கள் பெற்று நயந்தொழுகி இல்லறத்தில்
பன்மக்கள் போற்றும் பயனடைந்து — தன்மக்கள்
பேசுந் தமிழ்மொழியால் பேரின்பந் தாமெய்தி
ஆசகற்றி வாழ்தல் அறம்.

## மகன் அறம்

12. கற்றறிந்த இந்தக் கவிஞர் புதல்வனையே,
பெற்றெடுத்த தாய்தந்தை பேரறங்கள் —
உற்றவரென்(று)
ஆன்ருேர் புகழ அமைந்த மகன் தாய்மகிழச்
சான்ருேனாய் வாழ்தல் தகும்.

## பொதுவறம்.

13. அன்புடைமை, ஈகை, அரிய பொறையுடைமை,
இன்பமுறு நற்சொல் இனிதுடைமை, —மன்பெரிதும்
போற்றும் அடக்கம், புறங்கூருு நல்லொழுக்கம்,
ஏற்றமுறக் கொள்ளல் இனிது.

14. ஒப்புறவு தானறிதல், ஒத்த விருந்தோம்பல்,
தப்பில்லா நல்லொழுக்கஞ் சார்ந்தொழுகல், —
இப்புவியில்
செய்ந்நன்றி போற்றல், சிறப்பார் நடுவுநிலை,
ஐயமின்றிக் கொள்வதறம்.

15. பிறனில் விழையாத பேராண்மை கொள்ளல்,
அறனில்லாத் தீவினைக்கே அஞ்சல், —திறமாய்ப்
பயனில சொல்லாத பண்புடைமை பெற்றே
நயமாக வாழ்தல் நலம்.

16. அழுக்கா றகற்றி அயல்பொருளை வெஃகா
ஒழுக்க நெறிநின் றுவப்பாய் — இழுக்கின்றித்
தெய்வநூல் போற்றிச் சிறப்பாக இல்வாழ்ந்தால்
பொய்யாது நிற்கும் புகழ்.

வாழ்க! தமிழ்மதுரை வள்ளுவரின் நற்கழகம்
வாழ்க! திருக்குறளின் மாண்பு.

# வள்ளுவர் கண்ட மகளிர்.

(வித்துவான் திரு. இராமசாமி, வத்தலக்குண்டு)

## காதல் மகளிர்.

தெய்வப் புலவர் திருவள்ளு வர்வளர்த்த
பொய்யா மொழியான பூஞ்சோலை ஒன்றினிலே
இன்பத்துப் பாலாய் இலகுந் தருநிழலில்
அன்புசேர்க் கின்றார் அருங்கா தலரிருவர்
வேட்டை விருப்பால் விரைந்தவனும் ஆண்டகையோன்
கோட்டுப்பூக் கொய்யக் கொடிபோல்வாள் ஆங்குற்றாள்.

காணும் அவள்தெய்வக் கன்னியோ? மாமயிலோ?
மாணும் புவிவாழ் மடந்தையோ? என்றையம்
கொள்ளும் எழிலுடையாள் கூற்றுவனோ? கண்ணோதான்?
துள்ளுமினம் பெண்மானோ? தோன்று மிவள்நோக்கம்?
நோக்கில் இருவகையாம்! நோய்நோக்கம் ஒன்றுதனைப்
போக்கும் மருந்தாகும் பொன்னோக்கம் மற்றொன்று.
தான்நோக்கும் போதில் தரைநோக்கி நிற்கின்றாள்
தான்நோக்காப் போது தலைவியவள் தான்பார்த்துப்
புன்சிரிப்புக் காட்டிப் புளகம் அடைகின்றாள்
என்சொல்லு வோமந்த இன்பத் திருக்காட்சி!
எண்ணம் அறிவிக்கும் அண்ணலவன் கண்ணிற்குக்
கண்ணில்விடை கூறுகின்றாள் காதலர்வாய்ப் பேச

செதற்கோ

என்றே நலம்பேச இன்னவர்தம் உள்ளத்தால்
ஒன்றிவிடப் பின்னர் உடலாலும் இன்புற்ருர்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடியின் கண்ணே யுளவென் றவன்போற்றிப்
பின்னர் அவளைப் பிரிய நினைக்கின்ருன்
அன்னவள்பால் காண்கின்ருன் அடவோர் புதுமைத்தீ
விட்டுப் பிரிவதெனில் சுட்டுப் பொசுக்குவதாம்
தொட்டுப் பயில்வதெனில் தண்ணென்றே தோன்றுவதாம்
இந்தப் புதுத்தீயை எங்கிருந்து பெற்றனளோ?
விந்தை! எனஎண்ணி வேதனையால் மீண்டுமவன்
மோப்பக் குழைந்துவிடும் மென்பூ அனிச்சமதைக்
காப்புக் களையாமல் கன்னியிவள் ஆடுவளேல்
சாய்பறையே தாெலிக்கும் தைய லிவளிடைக்கு
என்றுசொல நின்ற இடையாளை நீக்கித்தன்
இன்றுணைவன் பால்வந் தியம்புகிருன் காதலினை
"உடம்போ டுயிர்தமக்குள் உள்ளதொடர் பேபோல்
மடந்தையிடை இன்றெனக்கு வாய்த்ததே ரன்பென்ருன்
காதலன் தன்பிரிவால் கவன்ற தலைவியவள்
போது கழிவதன்முன் போய்ப்புகுந்தாள் இல்லறத்தே
கண்ணில் தெரிந்திட்ட காதல் பயிருக்குப்
பெண்ணவள்பால் வித்தூன்றிப் போன தலைவனிடம்
சிந்தை பறிகொடுத்துச் செய்கை யவிந்திட்டாள்
நிந்தை பலர்கூறி நிற்பதையுந் தான்கருதாள்
நாள்தோறும் செய்யும் நல்லொப் பனைவிடுத்தாள்
"வாள்விழிக்கு மையெழுத மாதரசே! என்மறந்தாய்?"
என்றே வினவும் இனியவுயிர்த் தோழியிடம்
"அன்றுயான் கண்டுநலம் ஆர்ந்த தலைவன் என்
கண்ணுள்ளே எப்பொழுதும் காட்சிதரு கின்றதனல்
வண்ணமை தீட்டில் மறைந்து விடுவாரே!"

என்கின்ருள்; பின்னும் இடுகின்ற நல்லுணவைத்
தின்கின்ரு யில்லேயேன் என்ருல்அத் தேன்மொழியாள்
"நெஞ்சத்தென் காதலர்தான் நீங்கா திருப்பதனுல்
அஞ்சுகிறேன் இந்தவெப்ப மானவுண வுண்பதற்கே"
இவ்வகையாய்க் கூறியவள் ஏங்கியுயிர் வாழ்ந்தாலும்
எவ்வகையி லும்மடல்தான் ஏருத நாணுடையாள்
கனலொழுக்கம் நீங்கியிவள் கற்புடனே வாழ்வதற்கு
வளமார் திருமணமும் விரைவாய் முடிந்ததுவே!

## கற்பு மகளிர்

காதல் மணமுடிந்து காதலனும் காதலியும்
நாதமும் வீணையும்போல் நல்வாழ்க்கை மேவுகையில்
செல்வம் திரட்டிவரச் செம்மல் அயலூர்க்குச்
செல்வதனுக் காயத்தம் செய்து தலைவியிடம்
தன்பிரிவு கூறிவிடை தான்பெறவே நண்ணுகிருன்
இன்முகந்தான் காட்டா திருக்குந் தலைவியவள்
"போகாமை யுண்டேல் புகலுவீர் போய்வரலைச்
சாகா திருப்பார்க்குச் சாற்றி விடைபெறுவீர்!"
என்றே தளர்கின்ற ஏந்திழையைத் தேற்றற்குத்
துன்றுமுயிர்த் தோழியிடம் தோகையவள் கூறுகிருள்
வாயில் சிலகூறி மாதென்னைத் தேற்றிடுநீ
தீயிற் கொடிதான காதல்நிலை தேர்ந்தனேயோ?
தொட்டால்தான் தீச்சுடுமாம் தோழிகேள் காதல்தான்
விட்டால் சுடுகின்ற விந்தை அறியாயோ?"
என்பாள் தலைவி இராத்தூக்க மில்லாமல்
மின்போல் மெலிகின்ருள் மேவாதீ தேனென்ருல்
கண்கள் அவர்வாராக் காரணத்தால் தூங்காவே
பின்னவர்தான் வந்தால் பிரிவரெனத் தூங்காவாம்

காதலியிவ் வண்ணம் கருத்தழிந்து தன்கணவன்
மீதினிலே யூடல் மிகக்கொள்வேன் என்றிருக்கும்
போதினிலே அன்னோன் பொருள்திரட்டி வந்துற்றான்
தாதியிடத் தேமறுநாள் சாற்றுகிறாள் தையலவள்
"விரும்பாப் பிரிவையவர் மேற்கொண்ட போதினிலும்
அருங்காதலற்காணும் ஆசைகொண்ட தென்கண்கள்
ஊடிக் கதவடைப்ப தென்றிருந்த உள்ளந்தான்
கூடிக் களிப்படைதல் கொண்டதடி என்தோழி!
மையெழுதுங் கோல்காணுக் கண்போல் அவரைமுனம்
வைதபிழை காணனடி வந்தவரைக் கண்டவுடன்!"

தோழியிடம் இவ்வண்ணம் தூயதன் அன்புநிலை
வாழுநிறை கூறி மகிழுந் தலைவியவள்
ஓர்நாள் தலைவனுடன் உள்ளத் துவப்புடனே
நேர்காதல் பேசி நெகிழ்ந்திருக்கும் வேளையிலே
தோன்றல் இருந்தாற்போல் தும்மினன் "வாழ்க! வென
என்ற தலைவி இனிதாக வாழ்த்திப்பின்
சட்டென் றழுதாள். தலைவன்ஏன்? என்றிடலும்
இட்ட முடையார் எவர் நினைக்கத் தும்மினீர்?
என்கின்ற தையலவட் கென்னவிடை கூறுவனோ?
"நன்றன் றிவள்முன்னர் நாமினிமேல் தும்முவது"
எனவே யவன்நினைக்க, இன்னும் ஒருதும்மல்
மனவே தனையுறவே வந்ததவன் என்செய்வான்?
தும்மல் வருங்கால் துணிபோட்டுத் தான்மறைத்தான்
செம்மல் அவன்செயலைச் சேயிழையாள் கண்டுவிட்டாள்
ஓ! ஓ உணர்ந்தேன்யான் உண்மை! உமக்குரியார்
மாகாதல் கொண்டு மனதில் நினைப்பதனை
யானறிந்து விட்டாலென் செய்வதென எண்ணியோ
தான்மேவுந் தும்மலினைத் தடுத்து மறைக்கின்றீர்!"

அன்புத் தலைவனிடம் ஆர்ந்த தலைவியிவள்
இன்பத் தமிழின் இனிமை சொரிந்திடவே
தேன்வார்த்தை பேசித் திளைக்கின்ற கற்பரசி
தான்குறளில் வள்ளுவனார் சமைத்த மகளன்றோ?

## மனைமகளிர்

மனைக்கேற்ற மாண்புடையா ளாகிக் கொண்ட
மணவாளன் வருவாய்க்குத் தகுந்த வாறு
தனையாக்கிச் செலவுசெய்யும் தகைமை யுள்ளாள்
தலைவியவள் இல்லாமல் வேறு செல்வம்
எனைமாட்சி யுற்றிருந்தும் பயன்தான் என்னே?
இவளிருக்கும் இல்லத்தே எல்லாம் உண்டு
தனிச் சிறந்த கற்புடைய பெண்ணின் மேலாம்
தரமான பொருளுண்டோ தரணி மீதே.

மணஞ்செய்த தலைவனினும் வேறு தெய்வம்
மாநிலத்தி லில்லையென மதித்து நாளும்
வணங்கியெழும் அவள்விரும்பி வாய்தி றந்து
மழைவேண்டு மென்றிடிலோ வழங்கும் வானம்
குணம்பூண்டு கற்புநெறி காத்துத் தன்னைக்
கொண்டவனை நனிபேணிக் குவல யத்தில்
இணையில்லாப் புகழ்ச்சொல்லைக் காத்தெந் நாளும்
இலங்குறுதி படைத்தவளே இல்லாள் என்போம்.

காவலினால் மனைமகளிர் கற்பைக் காத்தல்
கடுகளவும் பயனற்ற செயலே அன்னார்
சீவனெனும் நிறையதனை அவரே காத்தல்
சிறந்ததொரு காப்பாகும் தலைமை பூண்டு

மேவுமுயிர்க் கணவனுக்குக் கடமை செய்யும்
மெல்லியலார் மேன்மைபல அடைந்தா ரன்றோ?
நாவுபுகழ் மனைவியிலார் பகைவர் முன்னே
நலமுடனுண் சிங்கநடை நடப்ப துண்டோ?

## வரைவின் மகளிர்

அன்பினால் விளைந்தி டாமல்
ஆக்கத்தின் அளவை எண்ணி
இன்புரை பேசுகின்ற இயல்பினர்
பொருள் விரும்பித்
தன்பாலே வருவார் யார்க்கும்
தன்னலம் விற்பார் இந்த
மன்பதைக் கிருமனத்து
வரைவிலா மகளிர் ஏனோ?

# வள்ளுவர் கண்ட துறவறம்.

வித்துவான் திரு. வீ. ப. நடராசன், பசுமலை.

## 1 குறட்சிறப்பு

திருக்குறளே தமிழ்மொழியில் சிறந்த அறம்
உயிருமாகும் வாழ்நாளெல்லாம்
திருக்குறளே ஓதுதலும் செந்நெறியில்
நிற்றலுந்தான் வாழ்வேயாகும்
திருக்குறட்பா செந்தமிழ்த்தேன் தீம்பாலின்
சுவையுமுண்டு செம்மைப்பண்பாம்
திருக்குறட்பா முழுமையுமே அன்புதரும்
அருள்வழியாம் தமிழே வாழ்க!

## 2 அருளுடைமை

செல்வத்துட் செல்வமஃதே அருள்செல்வம்
அதைப்பெற்றார் உண்மைச்செல்வர்,
பல்விதத்தும் பொருட்செல்வம் படைத்தோர்க்கு
இவ்வுலகம் மட்டும் வாய்க்கும்
நல்விதத்தில் கல்வியில்லான் மெய்ப்பொருளை
கண்டாற்போல் அதுவாம் பாரில்
செல்விதத்தில் பயனுமில்லை அருளில்லான்
செய்யுமறம் அருளே வேண்டும்.

## 3 புலால் மறுத்தல்

கொல்லானைப் பிறவுயிரைக் கொன்றபுலால்
இல்லானை வாழ்த்தக் கார்பால்
எல்லாரும் கைகுவித்து எஞ்ஞான்றும்
தொழுதிடுவர் இறைவன்போல
நல்லாராய் அருள்பெருக வாழ்ந்திடுவர்
நலனோங்கும் பகையேயென்றும்
இல்லாராய்ப் புவிவாழ்வின் இன்பமதை
எய்திடுவர் அருளே வேண்டும்.

## 4 தவம்

உற்றநோய் தனையேற்றல் உயிர்க்குறுகண்
செய்யாமை தவமேயாகும்
செற்றவர்கள் செய்கின்ற துன்பமெலாம்
பொறுத்திடுவார் பொன்போலாவர்
பற்றதுவோ தன்னுயிர்மேல் இல்லானைப்
பலர்தொழுவர், கூற்றந்தன்மேல்
வெற்றிகொள்வர் நோற்றலதே தலைப்பட்டோர்
வேறுசெல்வர் அருளே வேண்டும்.

## 5 கூடாஒழுக்கம்.

வஞ்சமனம் படிற்றொழுக்கம் வரவரமேற்
கொள்வானை நகுமே பூதம்
நெஞ்சுதனில் குற்றமுள்ளோன் தோற்றமது
என்செய்யும் நெடிதே நிற்கும்
விஞ்சுகின்ற வல்லுருவம் புலித்தோலைப்
போர்த்தலொக்கும் விளம்புங்காலை
அஞ்சுகின்ற புள்ளினத்தை அவன்மறைந்து
பிடித்தலொக்கும் அருளேவேண்டும்.

## 6 கள்ளாமை.

உள்ளத்தால் பிறர்பொருளை கள்வேமென்
றுன்னுதலும் தீதே யன்றோ
கள்ளத்தால் நமதுள்ளம் கரைபடாது
காத்தலன்றோ சிறப்பேநல்கும்
வெள்ளம்போல் அருள்அன்பு மேவிடுவார்
வேறுபொருள் கருதல் இல்லை
துள்ளுமனம் களவதனால் கரவுநின்றே
தொல்லைதரும் அருளேவேண்டும்.

## 7 வாய்மை.

வாய்மையெனில் தீமைஇலாச் சொல்பேசல்
வளமைநெஞ்சில் பொய்யே நீக்கல்
ஆய்ந்திடவே உள்ளத்தால் பொய்யாதார்
அவருரைவார் எல்லோருள்ளும்
காய்சுடராம் தவம்தானம் அனைத்தினுக்கும்
தலையாய அறமேயாகும்
தூய்மையகம் துலங்குநிலை சான்றோர்க்குத்
தலைவிளக்காம் அருளேவேண்டும்.

## 8 வெகுளாமை.

சினங்காத்தல் செல்லிடத்தே காத்தலன்றோ
செல்லாவிடச் சினமோ தீது
மனங்காத்து யார்மாட்டும் வெகுளாமை மங்காத
புகழுண் டாக்கும்
இனங்காத்து வாழ்வதற்கோ எவர்மீதும்
சினங்கொள்ளா திருத்தல் அன்றோ
புனங்காத்த உழவரென நினைத்தவெல்லாம்
உடனெய்தும் அருளேவேண்டும்.

## 9 இன்னாசெய்யாமை

எத்தகைய செல்வந்தான் எய்திடினும் பிறர்க்கின்னா
செய்தல் கூடா
பித்தர்சிலர் தமக்கின்னா செய்திடினும்
பிழைபொறுத்தல் மாசற்றார்கோள்
வித்தகர்கள் இன்னாரை வெற்றியுற நலஞ்செய்தே
விளக்கம் காண்பர்.
முத்தமிழாய் இலங்குகின்ற திருக்குறளின்
மூலமொழி அருளேவேண்டும்.

## 10 கொல்லாமை.

பல்லுயிர்க்கும் பகுத்துண்டு ஓம்புதலே பழம்பண்பு
தலையாய்க் கொள்வோம்
நல்லாறு எனப்படுதல் கொல்லாமை பொய்யாமை
நலனே சேரும்
செல்லாது உயிருண்ணுங் கூற்றெனினும்
செறிஅருளைக் கைக்கொண் டார்மேல்
இல்லாத பொருளில்லை அறவினையார் இல்லத்தில்
அருளேவேண்டும்.

## 11 நிலையாமை.

நில்லாது எப்பொருளும் நிலையுளது என்றுணர்தல்
புன்மை யாகும்
புல்லாகும் பெருஞ்செல்வம் புதைத்திடினும்
கூத்தாடும் அவைக்கு ழாம்போல்
இல்லாகும் இவ்வுடலும் நாச்செற்றுவிக்குளாகும்
நன்மை செய்வோம்
பொல்லாத கூடுநீக்கிப் போகுமுயிர் புள்போல
அருளேவேண்டும்.

## 12 துறவு.

ஐம்புலத்தை மேற்கொள்ளல் அரும்பொருளைத்
துறந்து நிற்றல் துறவேயாகும்
வெம்பவமாம் செருக்கொழித்தும் யானெனது
வேரறுத்தல் வானேகாட்டும்
தும்பிசூழ் மலரேபோல் தொடர்புகொண்டு
வாழ்ந்திடுதல் துன்பஞ்சேர்க்கும்
எம்பரமன் பற்றொன்றே இவ்வுலகப் பற்றறுக்கும்
அருளேவேண்டும்.

## 13 மெய்யுணர்தல்

எப்பொருளும் எத்தன்மைத் தாயிடினும்
மெய்ப்பொருளைக் காணல்வேண்டும்.
தப்புவினை இருள்நீக்கித் தருஇன்பந் தான்நல்கும்
காட்சியோர்க்கே
எப்பொழுதும் பயமின்றே மெய்யறிவே இல்லாதார்
வாழ்வேகாணூர்
இப்பொழுதே செம்பொருளை அறிந்திடுவார்
பிறப்பறுத்தார் அருளேவேண்டும்.

## 14 அவா அறுத்தல்.

அற்றவரே அவாஅற்ருர் அற்றதிலர் மற்றையரே
அறனேயஃதாம்
பெற்றசெல்வம் எதுவெனினும் பெரிதெனவே
கொளல்தீது நலனேயில்லை
கற்றவரோ அவா அறுப்பர் துன்பகலக்
கண்டிடுவார் பெருவீட்டின்பம்
பெற்றவரே யாவரவர் அவாநீத்த பெருஞ்செல்வர்
அருளேவேண்டும்.

## 15 முடிவு.

அருளுடைமை புலால் மறுத்தல் தவம், கூடா
ஒழுக்கம், கள்ளாமை ஐந்தும்
பெருவாய்மை வெகுளாமை இன்னுசெய் யாமையொடு
கொல்லாமையே
உருநிலையா மைதுறவு மெய்யுணர்தல், அவா
அறுத்தல் ஆக எட்டும்
அருந்துறவு அறஇயலாம் கைக்கொள்வர்
அடைவரின்பம் அருளே வாழ்க

# வள்ளுவர் கண்ட அறிவியல்.

[புலவர்மணி, வித்துவான் திரு. தி. கி. சுந்தரமூர்த்தி, பசுமலை.]

## 1. வணக்கம்.

உலகுபுகழ் தமிழ்நாடு உவந்தளித்த நூலாம்
ஒப்பில்திருக் குறட்பணியே உயிர்ப்பணியா யேற்றுப்
பலர்புகழ அன்பறிவு பயனுறவே காட்டிப்
பைந்தமிழன் எனுமுணர்வைப் பண்புறவே யூட்டி
வலந்திகழ இனியதமிழ் வளர்க்கின்ற மதுரை
வள்ளுவனர் கழகமெனக் கீந்தஅறி வியலை
நலந்திகழப் பாடுமுனம் நல்வணக்கந் தனையே
நவில்கின்றேன் கவியரங்கில் நல்லதமிழ் வாழ்க!

## 2. குறள் கற்றேன்.

திருவளரத் தமிழர்நலம் செப்புகின்ற நூலாம்
திருக்குறளைக் கற்பதற்குச் சிந்தித்து நின்றேன்
பெருமைமிகு வள்ளுவனர் பீடுபெறத் தோன்றி
பெரிதுவந்து குறட்காதல் போற்றி!என உரைத்தார்
அருமையுற அன்றுமுதல் அதிகாரம் அடைவாய்
அவரேயென் னுளம்மகிழ அன்பாகச் சொன்னர்
ஒருமைபெறு மனநிலையில் உறுதியுடன் ஓர்நாள்
உரைத்தஅறி வியல்நலமே உள்ளபடி சொல்வேன்.

## 3. அறிவுடைமை அதிகாரம்.

முப்பாலில் அதிகாரம் நாற்பத்து மூன்றில்
முறையாக அறிவுடைமை மொழிந்துள்ள தறிவீர்!
[1]எப்பொருளெவ் வெவர்வாயால் கேட்பினுமப் பொருளின்
இயல்பதனைக் காண்பதறி வாகுமென உணர்வீர்!
இப்பாரில் [2]அறிவற்றங் காக்கின்ற கருவி,
எவராலும் அழித்திடுதற் காகாத அரணும்,
தப்பின்றிப் [3]பேதையர்சொல் நோன்றலறி வெனவே
தமிழ்நூல்கள் சொல்கின்ற தன்மையினைக் காணீர்!

## 4. அறிவுவகை

உற்றறியும் ஓரறிவு உண்டறியும் ஈரறிவு உணர்ந்து மூக்கால்
கற்றறியும் மூவறிவு கண்டறியும் நான்கறிவு காது கேட்கப்
பெற்றறியும் [4]ஐயறிவு பிறப்பிலுள மாமாக்கள் பெற்றுவாழ
மற்றறிவாம் [5]மனவுணர்வைப் பெற்றவரே மக்களென மதிக்கற் பாலர்.

## 5. அறிவின் இலக்கணம்

நன்றினையும் தீதினையும் நாட்டினிலே நனியாய்ந்து நாடி யுள்ளம்
சென்றவிட மெங்குமதைச் செல்லவிடா தீதொரீஇத் திருவைச் சேர

---

1. எப்பொருள் யார்யார் (குறள்)
2. அறிவு அற்றம் காக்கும் (குறள்)
3. "அறிவெனப்படுவது பேதையார் சொல்நோன்றல்" (கலித்தொகை)
4. "மாவும் மாக்களும் ஐயறிவினவே" (தொல்காப்பியம்)
5. "மக்கள்தாமே ஆறறிவுயிரே" (தொல்காப்பியம்)

நன்றின்பால் உய்ப்பதுவே அறிவாகும் நன்மையெலாம்
உடையராவர்
இன்றியமையா நல்ல இலக்கணமும் உண்டிதற்கே இனிது
காணீர்!

## 6. தலையாய அறிவு

பிறிதொன்றன் நோயதனைத் தந்நோய்போல் பேணுதலும்
பெற்றி யின்றிச்
செறுவார்க்கும் தீயசெயல் செய்யாது விடுவதூஉம்
சிறப்பு மிக்க
அறிவினுக்குள் தலைஎன்ப, அறிவாரே பிறப்பென்னும்
அவலம் நீங்கச்
சிறப்பென்னுஞ் செம்பொருளைக் காண்பதற்கும்
அறிவினையே திகழச்செய்வார்.

## 7. மெய்யறிவு

வாலறிவன் நற்றாளைத் தொழுதுய்ந்து நீடுலகில் வாழ்வ
தற்கும்
நூலறிவின் துணைகொண்டு நுண்ணறிவு பெறுதற்கும்
நுவலும் ஞானப்
பாலறிவு மிகவோங்கிப் பண்புயர்வு வளர்தற்கும் பகைமை
இல்லா
மேலறிவு வருதற்கும் மெய்யறிவு நாடெல்லாம் மிகவேண்
டாமோ!

## 8. செயலறிவு.

ஈத்துவக்கும் இன்பத்தை ஏற்றறமே புரிதற்கும், இவறல்
நீங்கிப்
பாத்துண்டு பல்லுயிரும் ஓம்பிநல முறுதற்கும் பண்பு
சான்ற
மாத்தமிழின் நெறியுணர்ந்து கற்றபடி நடத்தற்கும்
மாண்பி னோடு
வார்த்தையினை வழங்கற்கும் வளமார்ந்த செயலறிவு
வாழல் நன்றே!

## 9. அறிவே சிவம்.

அறிவுதிரு வுடலாக ஆண்டவன்தான் அமைந்துள்ள
அருமை ஓர்ந்து
அறிவதனால் அவனடியை அறிந்துய்ந்த அருளாளர்க்
களவே யில்லை,
அறிவதனைச் சிவமென்றார் அறிந்திடிலோ 'வாலறிவன்'
அவனே யாவான்
தெரிவரிய எண்குணத்தான் திருவடியை யறிந்துய்ந்து
சிறந்து வாழ்க!

## 10. அறிவுடையார் இயல்பு.

ஆக்கமதை மிகக்கருதி முதலிழக்கும் செய்வினையை
அறவே நீக்கி
ஊக்கமுடன் அரும்பயனை ஆராய்ந்து கைக்கொண்டு
உறுதியாக
மாக்களைப்போல் வாழாது, மதிநுட்பம் நூலோடு
மாணப் பெற்று
ஏக்கமெலாம் தவிர்ந்திடுநல் லறிவுடையா ரியல்பதனை
இயம்பற் பாற்றே!

## 11. அறிவு வாழ்க.

அறனறிந்து வெஃகாத அறிவுடையா ராவதற்கும்
அன்புசான்ற
திறனறிந்து தன்னிலையில் திரியாதே யடங்கற்கும்
சிந்தை மாறிப்
பிறன்மனையை நோக்காத பேராண்மை யுறுதற்கும்
பிறர்க்குக் கேடு
மறந்துலகில் வாழ்தற்கும் மாட்சிமிகு மறிவுடைமை மன்னுயிர்க்கு
வேண்டும்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,

## 12. மனைதோறும் நல்லறிவு மலிக,

வாட்டுகின்ற உலகியலில் வழுத்தரிய துணையாகும்
மங்கை மாரை
ஆட்டுகின்ற பொம்மைகளாய் அடிமைகளாய்
ஆக்குதல்தான் அறிவோ சொல்வீர்!
காட்டுகின்ற அறிவாட்சி மனைதோறும் மாந்தரிடம்
கமழு மாயின்
ஈட்டுகின்ற ஊதியமாம் புகழோடு அருளுலகும் எய்த லாமே.

## 13. விழிப்புற்றேன்.

என்றுரைத்து வள்ளுவரும் என்குறிப்பை உணர்தற்கு
என்ன? என்ருர்
அந்நிலையில் விழிப்புற்றேன் அறிவியலின்
நலமுணர்ந்தேன் அவனி இந்நாள்
எந்நிலையில் அறிவியலைப் பெற்றுள்ள தென்பதனை
எண்ணி நிற்கும்
இந்நிலையில் கவிபுனையத் தலைப்பட்டே னிக்கால இயல்பு
நோக்கி!

## 14. தற்கால அறிவு

எண்ணலிலாப் புதுமைமிகு திரைப்படமும் வானொலியும்
எழுந்து யர்ந்தே
விண்ணதனில் விரைகின்ற வகையான ஊர்திகளும்
விரைவில் செய்தி
நண்ணிவரும் கருவிகளும் நொடிக்குநொடி வளர்கின்ற
நலனை யோர்ந்தால்
மண்ணுலகம் அறிவியலின் ஆட்சிதனில் மாறிவிட்ட
மாண்பு காண்பீர்!

15

அரியதொரு அணுவாற்றல் அனைத்துலகை ஆட்சிசெய
அமைத்து விட்டார்
பெரியபல வினையெல்லாம் அறிவியலின் துணைகொண்டே
பெற்று விட்டார்
உரியபல குணத்தோடு ஒருமையுற வாழ்தற்கே
உதவா விந்த
அறிவியலால் அணுநலமும் இலையென்றே அறைகின்றார்
அறிவு மிக்கோர்.

## 16. நல்லறிவு வாழ்க.

பாலைநில மணற்பரப்பில் பசும்பயிர்கள் வளர்க்கின்றார்
பறந்து தானே
வேலைசெயும் ஊர்தியையும் அமைத்துள்ளார்
விண்ணுலகம் விரைந்து செல்லச்
சாலைதனை ஆய்கின்றார், தரணியதை மிகச்சிறிதாய்த்
தந்து விட்டார்
கோலமுறு செயலறிவைக் குறள்குறித்த வழிசெலுத்திக்
குணமாய் வாழ்க.

## 17. உலகு வாழ்க!

ஆக்கம் பெறுக அறிவியலைக் கைக்கொண்டே
ஊக்கமுடன் வாழ்க! உலகு.

# வள்ளுவர் கண்ட வளநாடு

[பண்டித திரு. அ. முத்துச்சாமிப்புலவர், மதுரை.]

## கட்டளைக் கலித்துறை.

பல்வகையான வுணவுப் பொருளையும் பாங்குபெற
ஒல்லும் வகையால் விளைவிக்கவல்ல உழவர்களும்
நல்லதுகூறும் அறிஞரும் என்றும் நலிவடையாச்
செல்வரும் சேர்வது நாடென்று வள்ளுவர் செப்பினரே.

2

மூலப்பொருள்க ளனைத்தையும் கொண்டு முதன்மை பெற்று
ஞாலத்திலுள்ளோர் பெரிதும் விரும்பும் நலத்ததுவாய்க்
காலத்துக்கேற்ப விளைந்து கெடுதி கலத்தலின்றிச்
சாலச்சிறந்தது நாடென வள்ளுவர் சாற்றினரே.

3

விளையாமையாலோ பிறவகையாலோ மிகவருந்திக்
களையாதுமின்றி வருமுயிர் தம்மைக் கடுகளவும்
வளையாது தாங்கி யரசினர்க்கீயும் வரிப்பொருளைச்
சளையா தளிப்பது நாடென வள்ளுவர் சாற்றினரே.

4

ஆராது மேன்மேல் வளரும் பசியும் அருமருந்தால்
தீராத நோயும் பிறவுயிர்க் கேற்படும் தீங்குகளை
ஓராது தாக்கி அழிவினைச் செய்யும் உறுபகையும்
சேராதியல்வது நாடென வள்ளுவர் செப்பினரே.

5

பல்வேறு கொள்கை படைத்தகுழுக்களும் பாழ்படுத்தும்
பொல்லாத வுட்பகையும் திடுமென்று புரட்சிசெய்து
கொல்லும் தொழிலால் அரசினைவீழ்த்தும் கொடியவரும்
இல்லது நாடென வள்ளுவப் பெம்மான் இயம்பினரே.

6

கூடுதலான மழையொடுமுற்றும் குறைந்தமழை
ஈடுசெய்யொண்ணு இயற்கைக் கெடுதிகள் என்றிவற்ருல்
வாடுதலின்றிக் கெடினும் சிறிதும் வளங்குறையா
நாடுசிறந்ததென்றே வள்ளுவனுர் நவின்றனரே.

7

ஊற்றுநீர் ஆற்றுநீர் வேற்றுநீர் போன்ற உறுபுனலும்
ஏற்றமிகுந்த மலையும் மலையின் இழிபுனலும்
ஆற்றல் செறிந்த அரணும் பிறவும் அமைந்ததுவே
போற்றிடு நாடெனப் பொய்யில் புலவர் புகன்றனரே.

8

துன்பந்தரும் பிணியின்மையும் செல்வமும் தொல்லுலகில்
முன்பெங்கும் காணுவிளையும் பலவாய் முளைத்தெழுந்த
இன்பமும் காவலும் ஏய்ந்திடும் நாடே இனியதென
நன்புல வள்ளுவர் ஆய்ந்து தெளிந்து நவின்றனரே.

9

தந்தையும் தாயும் இரண்டும் விடுத்துத் தரணியுறும்
எந்தப்பொருளையும் தன்னிடம் வாழ்வோர் எளிதுபெறத்
தந்துவளங்கொளும் நாடேசிறந்த தகையதெனச்
செந்தமிழ் கற்றுத்தெளிந்த நம் வள்ளுவர் செப்பினரே.

10

திக்கனைத்தும் புகழ் மேன்மையும் செல்வமும் சீரும்பெற்று
மிக்கவளமுடைத் தாயினும் ஆட்சியில் மேவுநர்க்கு
மக்களுக்குந் தொடர்பில்லாத நாடுவளங்குறைந்து
தக்கபயன்பெறல் இல்லென்று வள்ளுவர் சாற்றினரே.

11

கண்டவர் உள்ளம் கவர்பேரெழிலும் கனிவளமும்
கொண்டநன் ஞட்டின் இயல்பென வள்ளுவர் கூறியதைத்
தண்டமிழ் மக்காள் பலமுறை எண்ணித் தமிழகத்தை
எண்டிசை போற்றுநாடாக்குவம் இன்னே எழுகுதிரே.

## வாழ்த்து.

வாழி திருவள்ளுவனர்; வாழி திருக்குறள் நூல்;
வாழியவர் கண்டவளநாடு; — வாழியரோ
தண்டமிழும், அம்மொழி சார்ந்த தமிழகமும்;
வண்டமிழர் வாழ்க வளர்ந்து.

# வள்ளுவர் கண்ட பொருளியல்.

திரு. க. ஆறுமுகனுர் B. O. L. (Hons.) மதுரை.

## (1) அவையடக்கம்

தமிழறிபே ராசிரியத் தலைவ ரே! யெம்
 தாயனையீர்! பெரியீர்! நும் தாள்வ ணக்கம்.
இமிழ்கடல்சூழ் ஞாலநிறை மாந்தர் வாழ
 எங்கள்திரு வள்ளுவனுர் எடுத்தி யம்பும்
அமிழ்தனைய பொருளியலை ஆய அன்பர்
 அடியேனை ஒருபொருளாய் மதித்தார்; நன்றி.
உமிகளைக்தே அரிசிகொளல் போல என்பால்
 உயர்பொருள்கொண்(டு) உளபிழைகள் பொறுத்தல் நன்றே.

## (2) மக்களுக்கு ஆகாப் பொருளியல்.

தவங்கள் செய்தே ஈன்ருேம்பும்
 தந்தை தாயர் தாமுமுடன்
தவிரா துறையும் கற்பினளும்
 தாலப் பருவக் குழவியதும்
அவஞ்செய் பசியால் வாடுங்கால்
 ஆகாப் பழிகள் பலசெய்தும்
அரிய பொருள்கொண்டு அவர்பேணல்
 அறமாம் என்னும் பிறர்நூல்கள்
பவஞ்சேர் நின்னைச் சுமந்தீன்ருள்
 பசியால் வாடக் கண்டாலும்
பண்பார் சான்ருேர் பழித்திடநீ
 பாரில் தீய வினைசெய்தே

உவக்கும் வகையின் அவரோம்பல்
உயர்வன் றென்னும் பொருளியலை
உலகோர்க் குணர்த்தும் வள்ளுவர்தம்
உயர்வை என்னென் றுரைப்பேனே.

## (3) பயன்தரும் வள்ளலின் பொருளியல்

ஊருணிநீர் நிறைந்தெல்லாத் துறையின் கண்ணும்
உற்றுயிர்கள் உண்டுய்ய உதவு மாப்போல்
பேரறிஞர் கருமுத்துத் தியாக ராசர்
பெருஞ்செல்வம் பலதுறைக்கண் சென்று சென்று
சீரறங்கள் பலவாகத் திகழ்ந்து நாட்டோர்
செழித்திடுமா றுதவுபெருஞ் சிறப்புக் காண்போம்
பாரிலிந்த வள்ளலைப்போல் பலர்முன் வந்தால்
பசிக்கொடுமைப் பேரரக்கன் பறந்தே போவான்.

## (4)

பயன்மரந்தான் உள்ளூரில் பழுத்திட் டங்குப்
படர்ந்திடுவோர் உண்டினிக்கப் பயன்தந் தாங்கு
நயனுடையண் ணுமலைப்பல் கலைக்கோர் கோயில்
நாட்டிலுள்ள தமிழர்முதல் யாரும் சென்றே
உயுங்கலைகள் பலகற்றிவ் வுலகி லெங்கும்
உயர்ந்திடுபே ரறிஞர்களாய்த் திகழ்தல் காண்போம்
செயலிலிந்த வள்ளலைப்போல் சிலர்முன் வந்தால்
தேயம்விட்டே அறியாமைப் பெரும்பேய் நீங்கும்.

## (5)

மருந்துமரம் தனதிலைபூ காய்வேர் பட்டை
மற்றுமுள பொருளனைத்தும் மாந்தர்க் கீயும்
பெருந்தகைநம் அழகப்பர் தமக்கென் றென்று
பேணுதிங் கீத்தளித்திவ் வுலக மக்கள்

திருந்துபல கலையனைத்தும் சென்று பெற்றே
திகழ்ந்தொளிரச் செயுந்தொண்டு சிறக்கக்
காண்போம்
இருந்திடுபல் செல்வர்களிவ் வாறு வந்தால்
இன்னாத வறுமைப்போர் எங்கே வாழும்?

## (6) பயன்தரா உலோபியின் பொருளியல்

சுற்றிவாழ் மண்ணிலுறை சத்தெலாம் வேர்கொடு
சுரண்டியுண் டிட்டு நச்சுச்
சூழ்கனிகள் பலகொண்டு நடுவூரில் வாழ்ந்து பிறர்
தூயவுயிர் கவர நிற்கும்
புற்றில்வாழ் அரவனைய நெடுமரத் தைப்பிறர்
பொறுத்திடார் கோடரி கொடு
போடுபோ டெனவெட்டி வீழ்த்திப் பொசுக்கிநல்
புதியமரம் வாழ வைப்பர்
பற்றுநிறை செல்வரிது போலவே பலருளர்
பாங்கிலுறை மாந்தர் செல்வம்
பறித்துவாழ்ந் திடுவதொடு பக்கம்வரு வோர்களைப்
பசியினால் வாட்டி டுவர்காண்
சற்றுசில காலம்பொ றுத்திடுவர் மாந்தர்பின்
தாங்காது லோபி களிடம்
தக்கபடி போயவர்தம் பொருளெலாம் கவர்வரிது
சத்தியம் உலக வியல்பே.

## (7) அரசியல் பொருளீட்டும் நெறி

வள்ளுவர்செய் பொருளியலை வடவர்பொருள் நூலுடன்
வகுத்துமிக ஆய்ந்த அறிஞர்
மலையினொடு மடுவதனுக் குளபெரிய வேற்றுமை
மதித்துணர்வர் சிறிது சொல்வேன்.

எள்ளுதலி லாஅருளும் அன்புமுத லானநல்
இனியநெறி வந்த பொருளே
இன்பமுதல் அறனெலாம் ஈயுமென மன்னவர்க்
கேயநெறி குறளு ணர்த்தும்,
கள்ளுணவு கொள்கயவர் இடுதிறையும், மெய்க்காதல்
காசின்மேல் கொள்க ணிகையர்
களித்திடுபொன், சூதாடு கடையரிடு பணமுமிவை
காவலர்கள் பொருள்செய் நெறியென்(று)
உள்ளுபொழு துள்ளந்து டிக்கின்ற கொடுநெறி
உரைக்கின்ற அவர்கள் பொருணூல்
உயர்நெறிகள் பலவோது குறள்கூறு பொருளியலோ
டொப்பிடுதல் பண்ப தாமோ?

## (8) பயன்தரும் அரசியலின் பொருளியல்

உண்டான போதுணவு மிகவீந்து தம்மிடம்
உணவுப்பொ ருள்கு றைந்தால்
உயர்குடிக ளுடனவர் இருந்துண்டு வாழ்ந்திட்ட
ஒருவேந்தர் பண்டி ருந்தார்.
மண்டுபசி வறுமையால் உலகதனில் எவருமே
வாடாமல் நாட்டி லுள்ள
மாபெரும் பொருளைப் பகுத்துண்டு பல்லுயிர்
வாழ்வித்தல் ஒன்று தானே
கண்டபல வானநல் அறங்களுள் தலைமைசால்
கவினறம் என்று நூலோர்
காட்டிடும் அப்பேர றத்தைவள் ளுவர்நீண்ட
காலத்தி னுக்கு முன்னே
விண்டனர் உறுதியாய்; அரசியற் பொருளியல்
மிகவுமிது உண்மை என்றே

மேடையில் பேசுதல் ஒன்றேய றிந்தநாம்
வேண்டிடோம் செயல ளவிலே,

## (9) பயன்தரா அரசியலின் பொருளியல்

ஆருமிந் நாட்டினில் தொண்டுபல செய்வமென
ஆரவா ரஞ்செய் துநம்
அறியாத நாட்டினர்தம் வாக்கினைப் பெற்றுநல்
அரசியலில் நுழைவர்; பின்னே
ஒருதவி யுஞ்செயார் உறுபசி யுடற்றிட
உழல்மக்கள் பொருளி யல்நிலை
உயர்த்துதற் கோராமல் அரசியலைத் தம்நிலை
உயர்த்தப் பயன்ப டுத்திப்
பெருமையோ டிகவாழ்வு வாழ்வதே குறியாய்ப்
பிறங்குசுக போக மெல்லாம்
பெற்றுவாழ்ந் திடுவர்இத் தகையஅர சியல்கண்டு
பெரிதுநொந் தேவள் ளுவர்
பாரின்மேல் சிலர்தாம் இரந்துமுயிர் வாழ்வதைப்
பார்த்துவாழ்ந் துலகி யற்றும்
பாரஅர செதுவும் பரந்துதான் கெடுகெனப்
படுசாப மிட்டி டுவரே.

## (10) இறைவன்பால் பொருளியல் வேண்டுகோள்

உலகவுயிர் வாழ்ந்திடத் தமதுதிரு பலதுறையின்
உதவிடும் செல்வர் வேண்டும்;
உண்டஎச் சிற்கையால் காகமும் ஓட்டாத
(உ)லோபிகள் இங்கு வேண்டாம்;
நலநிறையும் உழவுமுதல் பலதொழில் புரிந்துலகை
நாட்டிடும் மாந்தர் வேண்டும்;

நாடியொரு தொழில்செய்யா(து) ஏய்த்துப்
பிழைத்திடும்
நரிக்கூட்டம் நாட்டில் வேண்டாம்
பலவுயிரு மோம்பப் பகுத்துண்டு வாழ்கின்ற
பண்புநிறை அரசு வேண்டும்
பார்சிலர் இரந்துணத் தம்வயிறு போற்றிடும்
பண்பிலா அரசு வேண்டாம்
சிலர்கூறு பிறமொழிக் கன்றிசெந் தமிழ்கேட்டு
சிந்தைகுடி வந்த முருகே!
திருவள்ளு வர்கண்ட பொருளியற் கனவினை
செய்தருள் நனவாகவே.

# வள்ளுவர் கண்ட இன்பியல்.

(பண்டித. வித்துவான், திரு. தி. சங்குப்புலவர், சின்னமனூர்.)

## களவு

அணங்குகொலாய் மயில்கொல்லோ வென்றை யுற்றா
னவள்விழிகள் கூற்றமோ பிணையோ வென்றான்
சுணங்குபடர் முலைமறைத்த துகிலை நோக்கிச்
சூழு மத யானைமுக படாமீ தென்றான்
இணங்குமிரு நோக்கறிந்தா னோக்க முண்டே
லென்னபயன் வாய்ச்சொற்க ளெனத்து ணிந்தான்.
மணங்குலவு பொழிற்களவிற் புணர்ந்தான் மைந்தன்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

2

பொன்னனையா ளைப்புணர்ந்த தலைவ னைந்து
புலச்சுவையு மொருங்கிவள்பாற் பொருந்திற் றென்றான்
என்னபொருள் விழைந்திடினு மவைபோன் மிக்க
வின்புதருந் தோளிவட்கே யேய்ந்த தென்றான்
அன்னமென் றூவியுமனிச்சப் பூவு மாத
ரடிக்குநெருஞ் சிப்பழம்போ லழுத்து மென்றான்
வன்னமதி மாதர்முக மொவ்வா தென்றான்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்

3

அலரெழுந்தா லென்னுயிருந் தளிர்த்து நிற்கு
மவளருமை யூரறியா தாதலாலே

பலர்பழித்துக் கூறுகின்ற ரிதனுற் காமப்
பயிர்வளருங் கள்ளுண்டு களிக்குந் தோறு
கலர்மதுவை வேட்டல்போற் காமமின்பங்
காட்டுமுன்னர்க் களவினிகழ் காட்சி யெல்லாம்
மலர்மணம்போல் வெளிப்படனன் றென்ரு னன்பன்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

## கற்பு

### 4

இல்லாண்முற் செல்லாதே பாங்கி யைக்கூ
யென்பிரிவை நின்றலைவிக் கியம்பென் ருேனோர்
நல்லாண்மைக் காதலனவ் வுரையைக் கேட்டு
நடுக்கமுட னெதிர்நோக்கி நம்பா! வம்பா
செல்லாமை யுண்டேலெற் குரைப்பாய் சின்னுட்
சென்றுபின்னர் வருவனென்று செப்பு முன்றன்
வல்வரவந் நாள்வாழ்வார்க் குரைநீ யென்ருள்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

### 5

அண்ணலைமுன் னேக்கிமகிழ் கண்க ளிந்நா
ளழுவதென்ன நகைக்கிடமா மன்றே விந்நோய்
பண்ணியகண் பெருந்துயரம் படுக நைந்து
பலகாலு மழுதழுது நீரின் றுக
எண்ணியகா தலர்வரினும் பிரிவா ரென்றே
யேங்கியிவை துஞ்சாம லிருக்கு மெந்த
வண்ணமுயிர் வாழ்வனென்று ளோர்ம டந்தை
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

6

தாழ்காம நோய்பசலை தந்தார் நாணுஞ்
சாயலுங்கைம் மாருகத் தந்து மேனி
பாழ்காணும் பசலைநோய் நீங்கா தென்றும்
பரவுமிருள் விளக்கவியப் படர்தல் போல
வீழ்வார்வீ ழுப்படுவார் பெற்ருர் காம
மென்கனியை விரும்பினரின் சொற்பெருமல்
வாழ்வார்போல் வன்கணு ரில்லையென்ருள்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

7

எனைப்பிரிந்து சென்றவன்பர் யாம்வே றல்லோ
மென்றுரைத்தா ரன்றயர்த்தா ரின்றீ தென்னே
நினைப்பவர்போ னினையாரோ தும்மல் வந்து
நின்றுவிடுங் காரணமென் னெஞ்சி னீங்கார்
எனைத்துநினைத் தாலுமெனை வெறுத்தல் செய்யா
ரிதுவன்ரே காதலரெற் கியற்று நன்மை
மனத்திருத்தி வாழ்கின்றே னென்ரு ளோர்மின்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

8

எழுதுங்காற் கோல்காணுக் கண்ணைப் போல
வெதிரிருந்தா லவர்பிழைக ளெனக்குத் தோன்ரு
முழுதுமவர் செய்பிழைக ளொவ்வொன் ருக
முந்திமுந்தி வந்துநிற்கும் பிரிந்த போதே
அழுதுதுய ராற்றுவேன் கொண்கர் வந்தா
லகமகிழ்ந்து காதலுரை சாற்று வேன்யான்
வழுமறையுங் காதலா லென்ரு ளோர்மின்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

9

பண்ணூரு மொழியாளோர் பாவை யோர்நாட்
பண்புடைய காதலனைப் பார்த்தாள் வேர்த்தாள்
பெண்ணவா ரெல்லாரு நின்று காணப்
பெருமையுடன் றெருவுலவி வந்தீ ரன்னூர்
கண்ணூரக் கண்டழகை யுண்டார் மார்பு
கண்ணெச்சில் கண்ணேறு பட்ட தாலே
மண்ணும னும்மார்பு தீண்டே னென்றாள்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

10

இப்பிறப்பிற் பிரியோம்நா மென்றே னன்பா
லிருந்தேங்கிக் கண்ணீரை வடித்தாள் சால
அப்பிறப்பி லெனைப்பிரிய நினைத்தீர் நீரென்
றகக்குறிப்புத் தோன்றுவதை யறிந்தே னோர்நாட்
கொப்புமலர் சூடினே னாடி நின்றாள்
கூடுமொருத் திக்காகச் செய்தீ ரென்றே
மைப்புருவ மாதினியல் கேணீ யென்றான்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

11

ஊடுதலே காமத்திற் கின்ப மாகு
முண்டவுண வதுசெறித்த வின்பம் போல
கூடுதலே யூடுதற்கு மின்ப' மாளுங்
குறிப்பறிந்து காதலர்க ளுணர்தல் வேண்டும்
நீடுதலா லுண்டாகுந் துன்ப முப்பு
நிகராகு மிகைகுறைக்குப் புலவி யாலே
வாடுதலும் பாடுபெறு மென்றா னன்பன்
வள்ளுவரின் பியல்கூறு மாண்பு காண்பீர்.

# வள்ளுவர் காட்டும் வாழ்வியல்

பேராசிரியர், திரு. அ. கி. பரந்தாமனர், M. A. மதுரை.

1 வள்ளுவர் காட்டிடும் வாழ்வு — நாம்
வழிக்கொள ஏற்றநல் வாழ்வு;
கொள்வதற் கிதைவிட வேறு — பாரில்
கூறினும் இல்லையில்லை; தேறு.

2 வாழ்வதும் வீழ்வதும் எதனல்? — நாம்
வளர்ந்திடும் குணத்தினு லன்றோ?
ஆழ்ந்திதை எண்ணியே அம்மா! — வாழ்வை
அமைத்திடும் வழிகளைச் சொன்னர்.

3 கடவுளை நம்பிடச் சொன்னர்; — நற்
கல்வியைக் கற்றிடச் சொன்னர்;
திடமுடன் உண்மையைப் பேசி — இங்குத்
திறமுடன் வாழ்ந்திடச் சொன்னர்.

4 பொறுமையை மேற்கொளச் சொன்னர்; — துன்பம்
பொங்கிடில் சிரித்திடச் சொன்னர்;
வறுமையே வரினுமே மானம் — விட்டு
வாழ்ந்திடல் இழிவெனச் சொன்னர்.

5 மங்கையை மணந்திடச் சொன்னர்; — கூடி
மாண்புற வாழெனச் சொன்னர்;
இங்கிவள் கற்பினில் ஐயம் — நீ
என்றுமே கொள்ளாதே என்ருர்.

6 உடம்பினைப் போற்றிடச் சொன்னர்; — நல்ல
உணவினை உண்டிடச் சொன்னர்;
கடிதினில் நோயுறின் ஆய்ந்தே — அதைக்
கடிந்திடும் வழியுமே சொன்னர்.

7 திருவினை நல்லதோர் வழியில் — தேடிச்
சிறப்புடன் வாழென்று சொன்னார்!
உருவினைக் கண்டுமே எள்ளல் — நீ
ஒருநாளும் செய்யாதே என்றார்.

8 விதிவிதி என்றிடும் மக்கள் — நாட்டின்
வீழ்ச்சிக்குக் காரண மாவர்;
மதியுடன் விதியினைப் பற்றி — நம்
வள்ளுவர் சொன்னது கேளீர்.

9 ஊழினும் பெருவலி இல்லை; — எனின்
ஊக்கமும் முயற்சியும் இருப்பின்
ஊழினை வென்றிட முடியும்; — இதை
உணர்ந்துமே நடந்திடச் சொன்னார்.

10 அன்புடன் அறத்துடன் அன்றி — நல்ல
அறிவுடன் வாழ்வினை ஆற்றின்
இன்புறும் வாழ்வெனச் சொன்னார்; — இதை
யாவரும் உணர்ந்திடல் வேண்டும்.

11 நீயுமே வாழ்ந்திடப் பாரு; — பிறர்
நின்னுடன் வாழ்ந்திடக் கோரு;
ஆயவிவ் விதியினை நாடு; வாழ்வில்
அதைவிட விதியில்லை வேறு.

12 இன்பமும் துன்பமும் வாழ்வே; — இதை
என்றுமே உணர்ந்துநாம் உலகில்
நன்றுநம் வள்ளுவர் வழியில் என்றும்
நல்வாழ்வு நடத்திட முயல்வோம்.

# வள்ளுவர் கண்ட அரசியல்.

[பண்டித. திரு. மீ. கந்தசாமிப் புலவர், மதுரை.]

## எண்சீராசிரிய விருத்தம்

1

படைகுடிகூ ழமைச்சரண நட்பெனுமிவ் வாறும்
படைத்தவற்றோ டஞ்சாத பண்புமிகப் பெற்று
மிடையூக்க நல்லறிவு மிகுகல்வி கொண்டு
விரைவோடு துணிவறனு மேலோங்கி நிற்கக்
கொடையளிசெங் கோலன்பு குறையாத வின்சொல்
குடியோம்பன் முதலாகக் கூறுகிற தன்மை
யுடையவர சேயரசஃ தொருங்குபெறு வரசோ
வுயராசு பூவரசென் றுரைத்திடுத னன்றே.

2

மணிபொன்னு நெல்லுமென வகுத்துரைக்கு மிந்த
வளர்செல்வம் வருவழிகண் மனத்தகத்தே யெண்ணித்
திணியுடல்கொள் பகைவர்தமைச் செகுத்தவர்தா நல்குந்
திறைகொண்டு தன்னுடு சிறப்பநனி காத்துப்
பிணிபகைவர் சுற்றத்தார் பெரும்வினைஞ ரென்று
பேசுமிவர் கொள்ளாமற் பேணியறம் புரிந்தே
யணிகுதிரை முதற்படைக ளாக்குவித்து மக்க;
ளோம்பொறிக்கின் பாக்கியர சாளுவதே யாட்சி.

3

ஆய்கைக்கு நல்லனவென் றாகியநூ ரூன்கற்
ரூன்றவர்தஞ் சொற்கள்கேட் டவ்வழியி னின்று

காய்கைக்குட் செல்லாம லெல்லவர்க்குங் காணக்
காலமளித் தவர்குறைகள் காதுபுகக் கேட்டு
வாய்கைக்கு மருந்தெனினும் வாங்கியுணி ஞேயை
மாய்க்குமது போலமைச்சர் வாய்மொழிகேட் டாளின்
ருய்கைக்குட் டங்கியமு துண்டுவளர் சேய்போற்
றழைத்திடுமந் நாடதுவே சால்புடைய நாடு.

4

செருக்கோடு வெஞ்சினமுந் தீர்ந்தொழிய வேண்டுஞ்
சிறுமையும்பற் றுள்ளமுமே சிதைவடைய வேண்டு
முருக்குலையா முன்னிவறன் மாண்பிறந்த மான
முதவாத வுவகையிவை யொழிந்திடவே வேண்டு
மருக்கமழ்தார் மன்னவன்ருன் வலியனெனத் தன்னை
மதியாமை வேண்டுமிதின் மறவாமை வேண்டும்
தருக்கிவரு முன்வெள்ளந் தடையிடுதல் போலத்
தற்காத்துக் குற்றத்தைத் தடுத்திடவே வேண்டும்.

5

அறனறிந்தே யாவரினு மூத்தோரா யுள்ள
வறிவுடையா ரிடத்தரச னன்புமிக வைத்து
மறனழித்தம் மாண்புடையோர் வற்புறுத்த லேற்று
மறந்துமிழி சிற்றினத்தார் வாயிலும்பா ராது
திறனமையப் பலசெயலுந் தெரிந்துசெய னன்று
தெரியாத முன்றுணித றீதுதந்தே தீரும்
விறன்மிகுவேற் படைமன்னர் மீதிகலு முன்ன
மிகச்சிலவாம் வலியறிதன் மேன்மையது தருமே.

வை தி.க. சண்முகம் நூலகம்;
வரிசை எண்: 2782
கொடை எண்: 2782
காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.

# இராசேசுவரி பதிப்பகம்.

18, மேலச்சித்திரை வீதி, மதுரை.

## எங்களிடம் கிடைக்கும் நூல்

1. **தமிழ் தந்த கருத்துக்குவியல்.** குடந்தை எ

2. **சிறப்பியின் தியாகம்.** ஷை

3. **மதுரை மன்னர்.** வித்துவான் நா. இராமையாபி

4. **மதுரைத் தமிழ்ப்புலவர்கள்.** வித்துவான் வி. சி
கொழுந்து, சி. இராமச

5. **மனங்கவர் மதுரை.** வித்துவான் தி. கி. சுந்தரமூர்

6. **தமிழ் மாணவர் இலக்கணம்** (4 முதல் 6 ப

மற்றும் பல அரிய தமிழ் நூல்களும் கிடைக்கும்.